20.02.2026.
O.S.No. 279/2019

பிவா. சா. 3 கே.முருகேசன் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை :–

தாவா வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். நான் ஒரு பிளாட்டை வாங்கினேன். தாவாச்சொத்து செட்டிநாயக்கன்பட்டி கிராமம், சர்வே எண்.574/2, 575/1ல் அமைந்துள்ளது. என்னுடைய பிளாட் விஸ்தீரணம் 60 x 51 அடி ஆகும். மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்பது எனக்கு ஞாபகமில்லை. தாவாச் சொத்தைப்பொறுத்து போலியான பவர் ஆவணத்தை வைத்து எனக்கு கிரையம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் வில்லங்கம் எதுவும் பார்க்காமல் தாவாச்சொத்தை கிரையம் பெற்றுள்ளேன் என்றும் எனக்கும் தாவாச்சொத்துக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வாதி தாவாச்சொத்தில் 30 செண்ட் நிலத்தை பிரித்து வாங்கிக் கொள்வதில் எனக்கு எதுவும் ஆட்சேபனை உள்ளதா என்றால் அது அவர்கள் குடும்ப பிரச்சனை. என்னைப்பொறுத்தவரை மேற்படி சொத்தை நான் கிரையம் பெற்றுள்ளேன். வழக்கு விவரம் தெரியாமல் நான் எதிர்வாதம் செய்கிறேன் என்றும் அதனால் என்னுடைய எதிர்வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வில்லங்கம் பார்க்காமல் நான் பெற்றுள்ள கிரையம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிராதுப்படி தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.02.20 17:54:58 +0530

Principal District Judge,
Dindigul.